# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## S.C. NO.39/2021

**06.10.2023 - அ.சா. 1 வெங்கடேசன் சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் கொண்டு வந்திருக்கும் நகைகள் என் தாயாருடையது.. அதனை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுச் சென்றேன். தற்போது சாட்சியம் அளிக்க கொண்டு வந்துள்ளேன். என் தாயார் இறந்த பிறகு 3 நாட்கள் கழித்து கலசபாக்கம் போலீசார் மதியம் 1 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். அவர்களிடம் உள்ள நகைகளை என்னிடம் காண்பித்தார்கள். அவை என் தாயார் இறக்கும்போது அவர் அணிந்து இருந்தது என்று கூறினேன். மேலும் போலீசார் ஆஜர் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக கூறினார்கள். தங்க செயில் 23.720 கிராம் கொண்டது சா.பொ.1, சுமார் 10.370 கிராம் கொண்ட கல் வைத்த கம்மல் மற்றும் மாட்டல் ஒரு ஜதை சா.பொ.2, போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - ஒத்திவைக்கப்படுகிறது

ஒம்/- வெங்கடேசன்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 39/2021**

**Deposition of Witness for : PW 2**

**Name** : திரு. தேவராஜ்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06-10-2023.**

**(Accused present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பெரியகல்லந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 என் சகோதரர். சாட்சி ஆனந்தன் என் மாமா. சுமார் 3 வருடத்திற்கு முன்பு 10.8.2020ந் தேதி அன்று காலை முதல் என் தாயாரை பார்க்காத காரணத்தால் நானும், அ.சா.1, என் மாமா ஆனந்தன் ஆகியோர் இரவு 7 மணியளவில் நிலத்தில் குடியிருந்த என் தாயாரை பார்க்க சென்றோம். அங்கு பார்த்தபோது என் தாயாரை காணவில்லை. வீட்டில் வாசற்படி, கட்டில் அடியில் ரத்தக் கறை இருந்தது. கதவு திறந்து இறந்து. டிரங்க் பெட்டி திறந்த நிலையில் இருந்தது. அக்கம் பக்கத்தில் தேடியபோது எங்களது பக்கத்து நிலத்துக்காரரான பாண்டியன் நிலத்தில் உள்ள கிணற்றில் என் தாயார் பிணமாக தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தார். உடன் நாங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கும், பயர் அலுவலகத்திற்கும் தகவல் கொடுத்து என் தாயாரின் உடலை கிணற்றில் இருந்து எடுத்து பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதன் பிறகு போலீசார் பிரேத விசாரணை செய்து பிரேதத்தை ஒப்படைத்தார். நாங்கள் என் தாயாரின் உடலை அடக்கம் செய்து விட்டோம். 13.8.2020 பகல் 1 மணியளவில் கலசபாக்கம் காவல் நிலையம் சென்றோம். போலீசார் எங்களிடம் காண்பித்த நகைகளை என் தாயாருடையது என்று நான் கூறினேன். அப்போது அந்த நகைகள் யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்று கேட்டபோது போலீசார்

எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறினார்கள். பின்னர் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- தேவராஜ்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 39/2021**

**Deposition of Witness for : PW 3**

**Name** : திரு. ஆனந்தன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06-10-2023.**

**(Accused present)**

முதல் விசாரணை -

நான் தற்போது பெரியகல்லந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இறந்து போன லட்சுமி என் மாமியார். அ.சா.1, 2 என் மைத்துனர்கள். சுமார் 3 வருடத்திற்கு முன்பு 10.8.2020ந் தேதி அன்று காலை முதல் என் மாமியாரை பார்க்காத காரணத்தால் நானும், அ.சா.1, 2 ஆகியோர் இரவு 7 மணியளவில் நிலத்தில் குடியிருந்த என் மாமியாரை பார்க்க சென்றோம். அங்கு பார்த்தபோது என் மாமியாரை காணவில்லை. வீட்டில் வாசற்படி, கட்டில் அடியில் ரத்தக் கறை இருந்தது. கதவு திறந்து இறந்து. டிரங்க் பெட்டி திறந்த நிலையில் இருந்தது. அக்கம் பக்கத்தில் தேடியபோது எங்களது பக்கத்து நிலத்துக்காரரான பாண்டியன் நிலத்தில் உள்ள கிணற்றில் என் மாமியார் பிணமாக தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தார். உடன் நாங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கும், பயர் அலுவலகத்திற்கும் தகவல் கொடுத்து என் மாமியாரின் உடலை கிணற்றில் இருந்து எடுத்து பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதன் பிறகு போலீசார் பிரேத விசாரணை செய்து பிரேதத்தை ஒப்படைத்தார். நாங்கள் என் மாமியாரின் உடலை அடக்கம் செய்து விட்டோம். அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். 13.8.2020 பகல் 1 மணியளவில் கலசபாக்கம் காவல் நிலையம் சென்றோம். போலீசார் எங்களிடம் காண்பித்த நகைகளை என் மாமியாருடையது என்று நான் கூறினேன். அப்போது அந்த நகைகள் யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்று கேட்டபோது போலீசார் எதிரி

ரஜேஷ்குமாரிடம் இருந்து கைப்பற்றியதாக கூறினார்கள். பின்னர் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- ஆனந்தன்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.